**இயற்கையை போற்றுவோம் - 2**

**மரம் - ஒரு வரம்**

சின்னச் செடியாய் முளைத் தெழுந்து
சிரிக்கும் அழகு மரக்கன்றே!
உன்னை நாளும் உவப்புடனே
உன்னிப்பாக நோக்குகிறேன்...

மண்ணில் உள்ள மாசுகளை
மக்கிய உணவாய் உண்ணுகிறாய்!
விண்ணின் ஒளியை விருந்தாக
உறிஞ்சி உணவாய் அளிக்கின்றாய்!

குட்டிச் செடியாய் குதிக்கும் நீ,
கிளைகள் வளரப் பெருமரமாய்,
எட்டுத்திக்கும் நிழல் பரப்ப
எழுந்து நிற்பாய் எழிலுடனே!

வசந்த காலம் வந்து விட்டால்
வண்ணப்பூவாய் சிரித்திடுவாய்!
கசந்தப் பிஞ்சுக் காய்களைத்தான்
கனியாய் மாற்றித் தந்திடுவாய்!

மண்டைப் பிளக்கும் வெய்யிலிலே
மாளாப் பயணம் போவோரும்
அண்டி அமர்ந்து இளைப்பார
அருமை நிழலை அளித்திடுவாய்!

மூச்சுக் காற்றை மனிதருக்கும்
முறையாய் தூய்மை செய்திடுவாய்!
காச்சல் போன்ற நோய்களுக்கு
காலத்தே நீ மருந்தாவாய்!

தாவும் குரங்கு விளையாட
தவழும் தென்றல் மணம்கொள்ள
கூவும் பறவைக் கூட்டங்களும்
கொஞ்சிவாழும் உன் மேலே!

இத்தனை உதவிகள் நீசெய்ய
இரக்கமற்ற மனிதர்களோ,
எத்தனைக் கொலை கருவிகளால்
எப்படி உன்னை அழிக்கின்றார்!

சந்தன மரத்தை வீணர்களும்
சாய்த்து வீழ்த்தும் கொடுமைகளை
எந்த மனிதர் தடுத்திட்டார்
ஏழை மரங்கள் சாகுதய்யோ!

கட்டிக் காக்கா மனிதர்களே,
கண்ணாம் மரத்தை வெட்டுவதா?
வெட்டிச் சாய்வது மரமொன்றா?
வீணர் மனிதர் இனமும் தான்!

- மு. முத்துஜோதி